# அகிலஇந்திய அளவிலான பந்தயப் கார் சாம்பியன்ஷிப் – 2015 போட்டியில் திருசெங்கோடு செங்குந்தர் காலேஜ் ஆப் இன்ஜினியரிங் கல்லூரி மாணவர்கள் சிறப்பிடம்




திருசெங்கோடு செங்குந்தர் காலேஜ் ஆப் இன்ஜினியரிங் கல்லூரி மெக்கானிக்கல் இன்ஜினியரிங் துறையைச் சார்ந்த இரண்டு , மூன்று மற்றும் நான்காம் ஆண்டைச் சார்ந்த 19 மாணவர்களை கொண்ட குழு (மெகா ட்ரான்ஸ்) அகிலஇந்திய அளவிலான பந்தயக் கார் தயாரிக்கும் போட்டியில் கலந்துகொண்டு சிறப்பிடம் பெற்றனர். இப்போட்டியில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் A. பாலதண்டபானி M.A., M.Phil., அவர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்து ஊக்கப் பரிசாக ரூ.20,000

வழங்கினார். கல்லூரியின் முதன்மைச் செயல் அலுவலர் இன்ஜினியர் A.B. மதன், வேலை வாய்ப்பு இயக்குனர் அரவிந்த் திருநாவுக்கரசு மற்றும் கல்லூரியின் முதல்வர் முனைவர் சதிஷ்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்தப் போட்டி அட்லியர் மோட்டார்ஸ், ஹைதராபாத் என்னும் நிறுவனத்தால் 27.10.2015 முதல் 30.10.2015 வரை ஹைதராபாத்' ல் நடத்தப்பட்டது. இரண்டு கட்டமாக இந்த போட்டி நடத்தப்பட்டது. வடிவமைப்பு அறிக்கையை தேசிய அளவில் 80 குழுக்கள் சமர்ப்பித்தனர். இதில் 60 குழுக்கள் இரண்டாம் கட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். வடிவமைப்பு அறிக்கையை காட்சியளிப்பு மூலமாக விலக்கப்பட்டபின் தொழில்நுட்ப ஆய்வு, பிரேக் சோதனை , முடுக்கம் சோதனை, ஓட்டம் சோதனை மற்றும் உறுதிப்பாடு சோதனை ஆகியவை நடத்தப்பட்டது. செயல்திறன் அடிப்படையில் அகில இந்திய அளவில் 21 ஆவது இடத்தைப் பிடித்தது. தென் இந்திய அளவில் இது இரண்டாவது அணி என்பதும் முதல் முயற்சியில் சிறப்பிடம் பெற்ற முதல் அணி என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் ஓட்டுனராக பங்குபெற்ற மாணவன் விக்னேஷ் அவர்களை ஒரு வருடம் இந்திய அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளலாம் என்று மோட்டார் விளையாட்டு சங்கம் பரிந்துரைத்தது.

முன்னதாக மாணவர்களுக்கு பந்தயக் கார் தயாரிக்கும் விதத்தில் பயிற்சி அளிக்கும் விதமாக செப்டம்பர் மாதம் 8 மற்றும் 9 தேதிகளில் திருசெங்கோடு செங்குந்தர் காலேஜ் ஆப் இன்ஜினியரிங் கல்லூரியின் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் துறை சார்பாக தேசிய அளவிலான பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.